C. Thiagarajah

# மணிமலர்

C. THIAGARAJAH,
PANNAGAM SOUTH,
CHULIPURAM.

தொகுத்தோர் :

**S. P. Saminathan**
**A. L. M. Ismail**

சர்வகச்சேரி,
மகாலக்குமி புத்தகசாலை அதிபர்,
திரு. எஸ். செல்லக்குட்டி
அவர்களால்
இலங்காபிமானி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1946

All Rights Reserved]

விலை சதம் 75

# மணிமலர்

தொகுத்தோர்:

**S. P. Saminathan**

**A. L. M. Ismail**

சாவகச்சேரி,

மகாலக்குமி புத்தகசாலை அதிபர்,

**திரு. எஸ். செல்லக்குட்டி**

அவர்களால்

இலங்காபிமானி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

**1946**

*All Rights Reserved]*

விலை சதம் **75**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை ... ... | 1 |
| 2. | கடவுள் வணக்கம் ... ... | 2 |
| 3. | திருவிளையாடற்புராணம் (மாமனாகவந்து வழக்குரைத்தபடலம்) ... | 3 |
| 4. | சீறாப்புராணம் (மானுக்குப் பிணைநின்றபடலம்) | 8 |
| 5. | தேம்பாவணி (ஐயந்தேற்றுபடலம்) ... | 21 |
| 6. | குசேலோபாக்கியானம் ... ... | 29 |
| 7. | இரக்ஷணிய யாத்திரிகம் (உயிர்த்தெழுதல்) | 37 |
| 8. | பன்மணித்திரட்டு ... ... | 46 |
| 9. | குறிப்புரை ... ... | 54 |

C. Thiagarajah.
S.S.C.
Hindu College
Pandateruppu.

# முன்னுரை

தமிழ்மொழியிற் பல பாடபுத்தகங்கள் வெளிவந்துள வாயினும், அம்மொழியைத் தந்தாய்மொழியாய்க் கொண்டுள்ள இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் என்ற முப்பாலாரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய நூல்கள் இல்லாதது ஒரு குறையே; அக்குறையை நிவர்த்திசெய்வான் வேண்டி மேற்படி முச்சமயத்தவர்களது இலக்கியப் பூங்காவினின்றும் தொகுக்கப்பட்டது " இம்மணிமலர். "

மாணவர்களிடத்துச் சாதிச்சமயப் பண்பாடும், பரந்த நோக்கமும், சிறந்தகொள்கையும் ஏற்பட்டு யாவருந் தமிழ் அபிமானிகளாதல் வேண்டுமென்பதே இந்நூலின் இலக்காகும்.

இந்நூல், உயர்தர தராதரப்பத்திர (S. S. C; A. S. C.) வகுப்புகளுக்கோர் பாடபுத்தகமாக அமையத்தக்கதென்று கருதுகின்றோம்; இதனைத் தமிழுலகம் ஏற்று ஆதரிக்குமென்று நம்புகின்றோம். காகிதக் கட்டுப்பாடுநோக்கி உரை சுருங்கியதாயிற்றென்க.

S. P. Saminathan

A. L. M. Ismail

C. Thiagarajah

# கடவுள் வணக்கம்

அறக்கடல் நீயே! அருள்கடல் நீயே!
அருங்கரு ணாகரன் நீயே!
திறக்கடல் நீயே! திருக்கடல் நீயே!
திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே! நிகர்கடந் துலகில்
நிலையும்நீ! உயிரும்நீ! நினைநான்
பெறக்கட னீயே! தாயும்நீ எனக்குப்
பிதாவும்நீ! அனைத்தும்நீ அன்றோ?
—வீரமாமுனிவர்.

நாயினுங் கடையேன் என்செய்வேன் பிணியால்
நலிகின்ற நலிவினை யறிந்தும்
தாயினும் இனியாய் இன்னுநீ வரவு
தாழ்த்தனை என்கொலென்(று) அறியேன்
மாயினும் அல்லால் வாழினு நினது
மலரடி அன்றியொன்(று) எத்தேன்
காயினும் என்னைக் கனியினும் நின்னைக்
கனவினும் விட்டிடேன் காணே.
—இராமலிங்கசுவாமிகள்.

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.
—உமறுப்புலவர்.

C. THIAGARAJAH
PANNAGAM SOUTH,
CHULIPURAM.

# மணிமலர்

## திருவிளையாடற்புராணம்

### மாமனாகவந்து வழக்குரைத்தபடலம்

1. கன்னிநான் மாடக் கூடல் கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோ னன்றோன் தனபதி யென்னும் [பேரான்
மன்னினன்; அனையான் கற்பின் மடவரல் சுசீலை [யென்பாள்,
பொன்னினள் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவி [னன்னாள்.

2. எனவிவர் தமக்கு மைந்தற் பேறின்றி யிரங்கு நாளில்
தனபதி மருகன் தன்னைத் தகவுசால் மகவாக் கொண்டு
மனமகிழ் சிறப்பான் நல்க, மனைவியுந் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப் பொலிவுற வளர்த்துக் [கொண்டாள்.

3. தனபதி மகப்பே றற்றா னாயினும், தணவாக் காதல்
மனைவிமேல் வைத்த ஆசை மயக்கினால், வருந்தி யீன்ற
தனையனை மகவாத் தந்த தங்கைமேல் தீராப் பூசல்
வினைவிளைத் தொழுக வோர்நாள் இளையளும் வெகுண்டு [சொல்வாள்.

4. "பெருமித முனக்கேன்? பிள்ளைப் பேறற்ற பாவி! [நீயென்
அருமைநன் மகனா லன்றோ இருமையு மடைவாய்?" [என்னப்

பெரிதுகா ணடைந்து, மேலைக் காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவே னென்னாத் தனபதி தவமேற் செல் [வான்.

5. தன்பெருஞ் செல்வ மெல்லாம் மருமகன் தனக்கே யாக்கி
அன்புமிகொள் மனைவி யோடும் அருந்தவ நெறியிற் சென் [றான்
பின்பவன் வரவு தாழ்ப்ப, மருமகன் பெற்ற வெல்லாம்
வன்பினால் வழக்குப் பேசி வௌவினார் தாய மாக்கள்.

6. விளைநிலன், அடிமை, பைம்பூண், வெறுக்கை நன்பசுக்க [ளேனை
வளனுமற் றவர்கைக் கொள்ள, வான்சிறை யிழந்த [புட்போல்
தளர்வுறு மகனுந் தாயும் "சார்பிலார் தம்ம னோர்க்கோர்
களைகணா யிருக்குங் கூடற் கடவுளே ! சரணம்" என்னா

7. வந்துவா னகடு போழ்ந்த மணிமுடி விமானக் கோயில்
சுந்தர நாதன் பாதத் துணைதொழு திறைஞ்சி "யார்க்கும்
தந்தையும் யாயும்" ஆகுந் தம்பிரான் ! நீரே எங்கட்கு
எந்தையும் யாயும்" என்னா இரங்கினின் றினைய சொல் [வாள்.

8. "என்மகன் தன்னை மைந்த னின்மையா லெவருங் காணத்
தன்மக னாகக் கொண்டு தகுதியா லன்றே, காணி
பொன்மனைபிறவும்நல்கிப் போயினானெம்முன் ; இப்பால்
வன்மையால் தாயத் தார்க ளவையெலாம் வௌவிக் [கொண்டார்.

9. ஒருத்திநான் ; ஒருத்திக்கிந்தஒருமகன் ; இவனும்தேறுங்
கருதிலாச் சிறியன் ; வேறு களைகணுங் காணேன் ; ஐய!
அருத்திசால் அறவோர் தேறும் அருட்பெருங் கடலே ! [எங்கும்
இருத்திநீ அறியாய் கொல்லோ ?" என்றுபார் படிய [வீழ்ந்தாள்.

C. THIAGARAJAH,
PANNAGAM SOUTH,
CHULIPURAM.

10. மாறுகொள் வழக்குந் தீர்க்க வல்லவ ரருளினாலே
சீறுகொள் வடிவேற் கண்ணாள் சிறுதுயி லடைந்தாள்;
[மெய்யில்
ஊறுகொள் காண மைந்து முற்றறி கனவிற் கங்கை
யாறுகொள் சடையார் வேதச் செல்வரா யடுத்துச்
[சொல்வார்.

11. "புலர்ந்தபின் தாயத் தோரைப் புரவல னாணை யாற்றால்
வலந்தரு மன்றத் தேற்றித் தனையனை யிருத்தி;
யாம்போந்(து)
அலந்தரு மறிவான் மூத்தோ ரனைவரு மிசைய அந்தச்
சலந்தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் போதி" என்றார்.

12. வேரியங் குவளை யுண்கண் விழித்தனள் வியந்து "கெட்
[டேன்!.
ஆருமில் லார்க்குத் தெய்வந் துணையென்ப தறிந்தேன்"
[என்னாக்
காரிருங் கயலுண் கண்ணாள் கணவனைத் தொழுது
[வாழ்த்திச்
சீரிளங் குமரனோடுந் தெரிவைதன் மனையிற் சென்றாள்.

13. சென்றவள் கங்குலெல்லை தெரிந்தபின் எழுந்து, வெள்ளி
மன்றவன் கோயில் வாயில் வந்துவந் தனைசெய்(து)
[அம்பொற்
குன்றவன் உரைத்த வாற்றாற் கொடுமைசால் வழக்குப்
[பூட்டி
வென்றவர் இருக்கை யெய்திவிளம்புவாள்பலருங்கேட்ப.

14. "அட்டில் வாய்நெருப்பிடேல்;ஓர் அடியிடேல்; அறத்தா
[றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போகொட்டேன்; பலருங்
[கேட்க
இட்டனன் அரசன் ஆணை; அறத்தவி சேறி ஆன்றோர்
ஒட்டிய படிகேட் டெங்கள் உரிப்பொருள் தந்து
[போமின்.

15. என்றனள் மறித்த லோடும் இழுக்குரை யாடி வைது
வன்திறல் வலியார் தள்ளி யடித்தனர், மைந்த னோடுஞ்
சென்றனள் 'முறையோ' என்னாத் திருந்தறத் தவிசி
[னோர்முன்
நின்றுரை யாடினாள், கேட்(டு) அறிந்தனர் நீதி நூலோர்.

16. அறத்தவி சிருப்போர் ஏவல் ஆடவ ரோடும் போந்து
மறித்தலைக் களத்திற் கூட்டி வந்தனள்; வந்தவெல்லை
அறக்கொடி பாகர் வெள்ளி யம்பல வாணர் தாம்அத்
திருத்தன பதியே யென்னத் திருஉருக் கொண்டு செல்
[வார்

## வேறு

17. பெருவிலைக் குண்டலம் பிடரிற் பத்திபாய்ந்(து)
எரிகதிர் கவிழ்ப்பவா ளெரிக்கு மங்கதம்
அருவரைத் தோள்கிடந் திமைப்ப ஆகமேல்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்டவே.

18. முரலளி புறவிதழ் மொய்ப்பச் செய்யதா
மரைசிறி தலர்ந்தென மணிசெய் மோதிரக்
கரதலம் வீசியோர் கடுங்கண் ஏறெனப்
பெருமித நடைகொடு நடக்கும் பெற்றியார்!

19. வாடிய முளரிபோல் மாறிட் டாரிடத்(து)
ஊடியுர், அலர்ந்த போதொப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்தும், உட்கிடை
கூடிய முகத்தினர் குறுகு வாரவை.

## வேறு

20. அரசனிங் கில்லை கொல்லோ? ஆன்றவ ரில்லை கொல்லோ?
குரைகழல் வேந்தன் செங்கோல் கொடியதோ கோதில்
[நூல்கள்

உரைசெயும் தெய்வந் தானு இல்லைகொல்? உறுதியான
தருமமெங் கொளித்த தேகொல்?; என்றறக் கவிசிற்
[சார்வார்.

21. தனபதி வரவு நோக்கி வஞ்சனைத் தாயத் தார்கள்
இனைவுறு மனத்த ராகி, விம்மித மெய்தி, வெல்லும்
மனவலி யிழந்து, பண்டு வழக்கலா வழக்கால் வென்ற
வினைநினைத் துள்ளம் அச்சம் நாணினால்விழுங்கப்பட்டார்

22. மாதுல ராகி வந்தோர், மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை தன்னொடுந் தழீஇத்தங் கண்ட
மீதுல ராதசாம வேத மார்ப்ப வர்போல் வாய்விட்(டு)
“ ஆதுல ரானீர், அந்தோ! ஐய ” என்(று) அழுது
[னைந்தார்.

23. குடங்கை நெடுங்க ணாரும், குமரனும் வணிகர் தாளில்
தடங்கணீர் ஆட்ட வீழ்ந்தார்; தடக்கையா லெடுத்துப்
[புல்லி
மடங்கலே றனையார் தாமு மற்றவர் தமைத்தங் கண்ணீர்
நெடுங்கடல் வெள்ளத் தாழ்த்திக் குமரனை நேர்ந்து
[னைவார்.

24. “ஐம்படை மார்பிற் காணேன்; சிறுசிலம் படியிற்
[காணேன்;
மொய்ம்பிடை மதாணி காணேன்; முகத்தசை சுட்டி
[காணேன்
மின்படு குழைகள் காணேன்; வெற்றுடல் கண்டேன்
[அப்பா,
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளும் கவர்ந்தார்?”
என்னா.

25. அனைவரு மிரங்க வாய்விட் டழுதவர் இளையாள் தன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித் தடக்கையான் முதுகு
தைவந்(து)

"இனையன்மின்; என்முன் வேறென்(று) எண்ணன்மின்;
[எண்ணு வஞ்ச
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மின்"
என்று.

26. "நட்பிடை வஞ்சஞ் செய்து நம்பினார்க்(கு) ஊன்மா
[றூட்டத்(து)
உட்படக் கவர்ந்தும், ஏற்றோர்க்(கு) இம்மியும் உதவா
[ராயும்,
வட்டியும் மிதப்பக் கூறி, வாங்கியுஞ் சிலர்போ லீட்டப்
பட்டதோ? அறத்தா றீட்டு தம்பொருள் படுமோ?"
[என்று.

27. மங்கல மாடம் ஒங்கு மதுரைநா யகனை நோக்கிச்
செங்கரஞ் சிரமேற் கூப்பி, "மாணிக்கந் தேற்றி விக்கும்
எங்குல வணிகர் ஏறே! எம்மனோர் வழக்கை யிந்தப்
புங்கவ ரிடனுத் தீர்த்துத் தரு(க)"எனப் புலம்பி யார்த்
[தார்.

28. ஆவலித் தழுக கள்வர் வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
"காவலன் செங்கோல் நன்னூல் கட்டிய கருமத் தட்டில்,
நாவெனுந் துலைநாவிட்(டு), எம்வழக்கையும், நமராய் வந்த
மேவலர், வழக்குந் தூக்கித் தெரிகென விதந்து சொன்
[னார்.

29. நரைமுது புலியன் னன்சொற் கேட்டனு நடுங்கிச் சான்
[றோர்
இருவர் சொல் வழக்கு மேற்கொண்டறுவதித் திரண்டும்
[நோக்கித்
தெரிவழி யிழுக்கு ஞாதி வழக்கெனச் செப்பக் கேட்டு,
வெருவினர் தாயத்தார்கள் வலியரின் வேறு சொல்வார்.

30. "தவலருஞ் சிறப்பி னான்ற தனபதி வணிகர் அல்லர்
இவர்"என, அவையங் கேட்ப இருகையும் புடைத்து [நக்குக்
கவளமான் உரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர் [கோமான்,
அவரவர் குடிப்பேர், பட்டம், காணி,மற் றனைத்துங் [கூறும்.

31. தந்தை, தாய், மாமன், மாமி, தாயத்தார், அவரையீன்றோர்,
மைந்தர் கள்,உடன் பிறந்தார், மனைவியர், கிளைஞர் [மற்றும்
அந்தமில் குணங்கள் செய்கை யாதிய அடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ண முறையினான் மொழிந்தான் [முன்னோன்.

32. அனையது கேட்ட ஆன்றோர் அனைவரும் நோக்கி,"அந்தத்
தனபதி வணிகர் தாமே யிவர்"எனச் சாற்ற லோடும்,
மனவலித் தாயத் தார்தம் வழக்கிழுக் கடைந்த(து) "ஈது
நனைவனை வழிவேம்பன் தேரின் தண்டிக்கும் நம்மை" [யென்னா.

33. "இல்லினுக் கேகிமீள் வன்யான்" என்றும், குளத்திற் [கேகி
ஒல்லையில் வருவேன்" என்றும் ஒவ்வொரு வார்த்தை [யிட்டு
வல்லெழு வனைய தோளார் அனைவரும் வன்கால் தள்ளச்
செல்லெழு முகில்போற் கூட்டஞ் சிதைந்தனர் ஒளித்துப் [போனார்.

34. அனையவர் போக நின்ற அறனவின் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனமெலாந் தத்த மைந்தற்(கு)
எனமனை யெழுதி வாங்கி ஈந்தனர்; வந்த வெல்லை
மனமொழி கடந்த நாயகர் மறைந்துதங் கோயில் புக்கார்.

35. இம்மெனப் பலருங்காண மறைந்தவர் இருந்தனா கூடற்
செம்மலென் றறிந்து, நாய்கச் சிறுவனுங் குவளைத்துங்க
விம்மித மடைந்து வேந்தன் வரிசையுள் வெறுப்ப நல்கிக்
கைம்மறி வணிகர் கோயில் புதுக்கினான் கனகங்கொண்டு.

# சீறாப்புராணம்

## மானுக்குப் பிணைநின்றபடலம்

1\. குபினிழல் பரப்பச் செவ்விக் கொழுந்தடை நறவஞ்
[சிந்தும்
வயிரவொண் வரையின் விம்மி வளர்ந்ததிண் புயத்து
[வள்ளல்
செயிரறு மறையின் தீஞ்சொற் செழுமழை பொழிந்து
[தீனின்
பயிர்வளர்ந் தேறச் செய்து பரிவுடன் இருக்கு நாளில்.

2\. அரியினஞ் செறிந்த போன்ற அறபிகள் குழுவி னுப்பண்
ஒருதனிச் சியம் ஒப்ப உடையவன் றாதர் செல்வத்
திருநகர்ப் புறத்து நீங்கிச் செழிமுகின் முடியிற் றுங்கி
மருமலர் செறியுஞ் சோலை சூழ்ந்ததோர் தரையைச்
[சார்ந்தார்.

3\. கொன்றையுங் குருந்துங் கார்க்கோற் குறிஞ்சியும்
[வேயுந் தெற்றித்
துன்றிய நிழலு நன்னீர் சொரிதரும் இடமுஞ் செந்தேன்
மன்றலொண் மலரு நீங்கா வனந்திகழ் வரையின்
[கண்ணே
சென்றன நெறிக்குங் காந்திச் செவ்விமெய் முகம்ம
[தன்றே.

4\. வனந்திரி விலங்கு மாய்த்து வன்றசை வகிர்ந்து வாரித்
தினந்தொறுங் கோலிற் கோலித் தீயிடை அமிழ்த்திக்
[காய்த்தித்
தனந்தனி யிருந்து தின்று தன்றசைப் பெருக்கல் அன்றி
அனந்தலிற் பொழுதும் வேறோர் அறிவென்ப தறிந்தி
[லானே.

5. குறுமெயர்ப் புதித்த மெய்யுங் கொழுந்தசை மணத்த [வாயும்
பறித்தலை விரிப்புங் கூர்ந்த படுகொலை விழியு மாக
அறபினில் அறபிவேடன் அடவியிற் றொடர்ந்தோர் [மானைக்
கறுவொடும் வலையிற் சேர்த்திக் கட்டிவைத் திருப்பக் [கண்டார்.

6. குழைகுழைத் தெறியுஞ் செந்தேன் கொழுமலர்க் காவை [நோக்கார்
பொழிமலை அருவி நோக்கார், புறத்துநன் நிழலை [நோக்கார்
செழுமுகிற் கவிகை வள்ளல் செறிதரும் ஈந்தின் [செங்காய்
மறையெனச் சொரிவ நோக்கார் மானையே நோக்கிச் [சென்றார்.

7. அருளடை கிடந்த கண்ணும் அழகொளிர் முகமுஞ் [சோதி
சொரிநறை கமழ்ந்த மெய்யுஞ் சூன்முகிற் கவிகை [யோடும்
வருவது தூயோன் தூதர் முகம்மது வென்னத் தேறிப்
பருவரல் உழக்கும் உள்ளத் தொடும்பிணை பகரு மன்றே.

8. நெடியவன் றூதர் வந்தார் வேடனு னிலத்தில் அந்தம்
உடலுயிர்க் கிறுதி யில்லை உழையினத் தோடுஞ் சேர்ந்து
கடிதினிற் கன்றுங் காண்போம் எனமுகம் மதுவைக் [கண்ணு
ணெடிவரை யிமைமூ டாம னோக்கியே கிடந்த தன்றே.

9. இடைநிலத் துருக்கி விட்ட விரசிதம் பரந்த தென்ன
மடிசுரை யமுதஞ் சிந்த வடிக்கணீர் பனிப்பத் தேங்கு
முடலகந் துருத்தி யொப்ப நெட்டுயிர்ப் புயிர்த்துக் காலிற்
றுடரொடுங் கிடப்பத் தூயோன் றூதுவர் அடுத்து [நின்றார்.

10. கொடியடம் பிலையை மானும் குளம்பின்மேற் சுருக்கும் [புள்ளிப்
பொடியுடற் பதைப்பும் வீங்கிப் புதையுநெட் டுயிர்ப்பு [நோக்கி
நெடியவ னிறகு ஞல்லா நெஞ்சுநெக் குருகிக் கானின்
பிடிபடு மானின் றன்பாற் பேரருள் சுரப்ப நின்றார்.

11. கதிர்விரி ஹறபீபு நிற்பக் கானகத் தருக்க ளியாவும்
புதுமல ரலர்த்திச் செந்தேன் பொழிவமான் வருத்த [நோக்கி
விதிர்கிளைக் கரங்கள் சாய்த்து மென்றழைக் கூந்தல் [சோர
மதியழிந் திரங்கிக் கண்ணீர் வடிப்பன போன்ற தன்றே.

12. குலத்தொடும் பறவை தத்தங் குடம்பையிற் புகுதன் [மானை
நிலத்திடை கிடத்திக் கட்டி நின்றவேட் டுவனைக் கண்ணு
னலத்தொடுங் காண்ப தாகா தெனநடு நடுங்கி யுள்ள
முலைத்தறப் பெடையி னோடு மொளிப்பன போன்ற [தன்றே.

13. எட்டலர் நறவ மாந்தி யிருஞ்சுரும் பிசைக்குந் தோற்றம்
வாட்டமின் முகம்ம திங்ஙன் வந்தனர் வருந்துமானை
மீட்டனர் வேட னீமான் விரும்பினன் பயங்க டத்தார்
கூட்டுறைந் தொளித்தன் மாற் றுமெனப்பலகூயபோலும்.

14. நிறைவளஞ் சுரந்த கானி னின்றநந் நபியை நோக்கிக்
குறியவா லசைத்து நீண்ட கொழுங்கழுத் துயர்த்தி [நீட்டி
மறைபடா மதியே வண்மை முகம்மதே யென்னப் [போற்றித்
தழுகிடா தெவர்க்குங் கேட்பச் சலாமெடுத் துரைத்துக் [கூறும்.

15. வல்லவ னுண்மைத் தூதே மன்னுமா நிலத்தின் மாந்த
ரல்லலை யகற்றி வேதத் தறநெறி பயிற்றிச் சொர்க்கத்
தில்லிடை புகுத்தப் பூவி னிடத்தினி லுதித்த கோவே
யொல்லையி னெனது சொற்கேட் டுவந்தரு ளளிக்க
[வேண்டும்.

16. இருநிலத் தாசைக் காயோ ரிளங்கன்றென் வயிற்று
[றூதான்
மருளிய கலையு நானும் வருத்தமுற் றிருக்குங் காலம்
பெருகுதீன் முகம்ம தேநும் பெயரினைப் போற்றல்
[செய்தே
னுருவமைந் திளஞ்சூன் முற்றி யுதரமும்வளர்ந்ததன்றே.

17. தனியனென் னுயிருங் காக்குங் கலையுயிர் தானு மொன்று
யினிதினென் றூய தென்ன விளங்கன்றென் றீன்றே
[னின்ப
கனிகளி கடலி லாழ்ந்து நறுமலை யிடத்திற் சேர்ந்து
துனிபல வகற்றி னேன்முன் சூழ்வினை யறிகி லேனே.

18. உள்ளுயி ரனைய கன்று மொருத்தனு மியானு மோர்நாள்
வெள்ளமொத் தனைய மானி னினமுமோர் வெற்றிபின்
[சார்பி
னள்ளிலை யள்ளி வாய்கொண் டரும்பசி தடிந்து நீருண்
டெள்ளள வெனினு மச்ச மின்றிநின் றுலவு நேரம்.

19. அத்திசைக் கெதிரின் மேல்பா லடுத்தொரு குவட்டின்
[கண்ணே
மத்தகக் கரிபு மாய்க்கும் வரிப்புலி முழக்க நீண்ட
குத்திரத் தசனித் தாக்கின் குவலய மதிரக் கேட்டுத்
தத்தியெத் திசையுந் திக்குந் தனித்தனி சிதறி னேமால்.

20. கூடிய தூறும் பாரிற் குளித்திடக் குதித்து வல்லே
யோடிய திசையி னென்றை யொன்றுகாண் கிலதா
[யானும்

வாடிய மனத்தி னோடு மறியையு நோக்கா தாக்கை
யாடியிற் றுரும்பாய் வேறோ ரடவியி னடைந்திட்
[டேனால்.

21. அடவியி னடையுங் காலை யவ்வுழை கரந்தில் வேடன்
றடரிடும் வலையைச் சுற்றிச் சுருக்கிடப் புலிவாய் தப்பி
மிடலரி யுழையிற் சிக்கி மிடைந்தெண மிடைந்து செவ்வி
யுடலுயிர் பதைப்பத் தேம்பி யுணர்வழிந் தொடுங்கா
[நின்றேன்.

22. திருக்கற நாலு தாளுஞ் செவ்விதிற் கூட்டி யங்கை
வரிக்கயி றதனாற் சுற்றி மாறுகொண் டழுத்துக் கட்டிக்
கரிக்கர மென்ன நீண்ட கரத்தினாற் றூங்கி முன்னர்ச்
சுருக்கிய வலையை நீக்கித் தோளினி லெடுத்துக்
[கொண்டான்.

23. கட்டுடன் கிடந்து நெஞ்சிற் கவலையுள் ளழிந்து மாறு
நெட்டுயிர்ப் பெறிந்து சோர்ந்து நிலத்திடை கிடக்கு
[நேரம்
வட்டவெண் கவிகை வள்ளல் முகம்மது நபியே யும்மைத்
திட்டியிற் றெரியக் கண்டேன் றிடுக்கமுந் தீர்ந்த தன்றே.

24. எனவிவை யுரைத்துப் பின்னு மெழினபி முகத்தை
[நோக்கி
மனநிலை வாக்கி னோடு முகம்மதே யென்னப் போற்றிப்
புனமுறை விலங்கின் சாதி யாயினுந் தமியேன்
[புன்சொற்
றனையருட் படுத்திக் கேட்பீ ரென்றுரை சாற்றிச்
[சாற்றும்.

25. இச்சிலை வேடன் கையி னிறத்தலை யுளத்தி லெண்ணி
யச்சமுற் றுரைப்ப தன்றிவ் வவனியிற் சீவ னியாவு
நிச்சய மிறத்த லல்லா விருப்பவை நிலத்தி லுண்டோ
முச்சம விளங்குந் தீனின் முதன்மறை முறைமைச்
[சொல்லோய்.

26. கலையெனைப் பிரிவி லாது கண்ணிமை காப்ப தென்ன
வலைவறக் காப்பச் சின்னா ளவனியிற் கலந்து வாழ்ந்தேன்
குலவிய மறியு மீன்றேன் குறித்தினி யிருப்ப தென்கொ
லிலை றணிப் பணியி னாக்கை யிறத்தலே நலத்தன் மன்னோ.

27. அடவியிற் கிரியில் வீணி லவதியுற் றிறந்தி டாமல்
வடிவுடைக் குரிசி லேனும் மலர்ப்பதச் செவ்வி நோக்கிப்
படுபரற் கானில் வேடன் பசிப்பிணி தீர்ப்ப தாக
வுடலிறத் திடுத லெவ்வெவ் விறப்பினு முயர்ச்சி
[மேமேலாய்.

28. ஒல்லையி னோடி நீங்கா தொருத்தலின் றளவு மோந்து
புல்லினைக் கறியா நீரும் புசித்திடா திருந்து தேடி
யல்லலுற் றழுங்கிக் கண்ணி னருவிநீர் சொரிய வாடிப்
பல்லவை மெரியிற் புக்க தெனவுடல் பதைக்கு மன்றே.

29. பிடிபடு மிதற்கு முன்னே மூன்றுநாட் பிறந்த புல்லின்
கொடிதனை மேய்ந்து நீருங் குடித்தறி யாத பாவி
மடிமுலை யிறங்கிப் பாலும் வழிந்தது குழவி சோர்ந்து
படிமிசை கிடந்தென் பாடு படுவதோ வறிகி லேனே.

30. கோட்டுடைக் கலையினோடுங் கூடிற்றோ வலதோர் பாலின்
மீட்டதோ வினத்தைச் சேர்ந்து விம்மிநின் றேங்கிற்
[றோகான்
காட்டிடைப் புலிவாய்ப் பட்டுக் கழிந்ததோ வென்னைத்
[தேடி
வாட்டமுற் றலறி யோடி மறுகிற்றோ வறிகி லேனே.

31. தேங்கிய பசியால் வாடித் திரிந்ததோ விறந்ததோவென்
றேங்கிய வருத்த மல்லா லிவ்விட ரதனி லாவி
நீங்குமென் றுள்ளத் துள்ளே னெட்டுட லுடும்பி னாவி
தாங்கிய தரும வேந்தே தவறன்று சாத மன்றே.

32. மன்னிய கலிமா வென்னும் வழிநிலை மார்க்க ரியாரும்
பொன்னிலம் புகுதச் செய்யும் புண்ணிய புகழின் மிக்
[கோய்
கொன்னிலைச் சிலைக்கை வேடன் கொடும்பசி தணிப்பே
[னென்றாட்
பின்னிய பிணிப்பு நீக்கிப் பிணையென விடுக்கல்
[வேண்டும்.

33. விடுத்திரேற் கலையைச் சேர்ந்து விலையுறுங் கவலை தீரப்
படுத்தியென் னினத்துக் கோதிப் பறழினுக் கினிய
[தீம்பால்
கொடுத்தரும் பசியை மாற்றிக் குலத்தொடுஞ் சேர்த்து
[வல்லே
யடுத்தொரு கடிகைப் போதில் அடைகுவன் என்ற
[றைந்த தன்றே.

34. மானுரை வழங்கக் கேட்டு மனத்தினிற் கருணை
[பொங்கிக்
கானவேட் டுவனை நோக்கிக் கன்றிடை வருத்தந்
[தீர்த்துத்
தான்வரு மளவு மியானே பிணையெனச் சாற்றி நின்றார்
தீனெனும் பயிரைக் காத்துச் செழும்புகழ் விளக்குஞ்
[செம்மல்.

35. பிரியமுற் றிரங்கிக் காட்டின் பிணைக்கியான் பிணையென்
[றோது
முரையினைக் கேட்டு வேட னெண்புயங் குலுங்க நக்கித்
தெரிதரு மறிவிலேனொடுஞ் சினத்தொடுங் கலந்து தேர்ந்து
கருமுகிற் கவிகை வள்ளல் கவின்முக நோக்கிச் சொல்
[வான்.

36. பெருத்தமான் றனையா விற்றைப் பெரும்பசி தவிர்த்த
[தென்று
விருத்தியிங் கிருந்தே னந்த விருமனக் களிப்பை நீக்கி

வருத்தமுற் றிடுஞ்சொற் சொன்னீர் முகம்மதே
[யெவர்க்கு மிச்சொற்
பொருத்தம தன்று விண்ணு மண்ணிலும் புகழின்
[மிக்கோய்.

37. கானிடை பிடித்த மானைக் கட்டவிழ்த் தவணிற்
[போக்கின்
மானிடர் பாலின் மீட்டும் வருவது முன்ன ருண்டோ
ஞானமு மறையுந் தேர்ந்தோர் செய்யுளு நாட்டிற்
[றுண்டோ
வூனமிப் பிணைச்சொ லையா வோதுவ தொழிக
[வென்றான்.

38. என்னுறு பிணையாய்ப் போன விரும்பிணை கடிகைப்
[போதி
னுன்னிடத் தறும்வா ராதே லுன்பசி தீர்ப்ப தாகப்
பின்னிரண் டொன்றுக் கன்பாய்த் தருகுவன் பேது
[றேலென்
றன்னவன் றனக்குச் சொன்னு ராரணத் தமிர்தச்
[சொல்லார்.

39. கள்ளமுங் கரப்பு மாறுக் கருத்தின னுயிர்கட் கென்று
மெள்ளள விரக்க மில்லா வேட்டுவ ரினத்தி னுள்ளே
னுள்ளம தறிந்துங் கேட்டீ ருரைப்பதென் னுயர்ந்த
[மேன்மை
வள்ளல்நும் மதுர வாய்மை மறுத்திலேன் விடுத்தி
[ரென்றான்.

40. வேட்டுவ னுரைப்பக் கேட்டு முகம்மது விருப்ப முற்று
வாட்டமுற் றிருந்த புள்ளி மானிடத் திருந்து பாரி
னீட்டிய காலிற் சேர்க்த துடரினை நெகிழ்த்துக் கானிற்
கூட்டுறக் குழவிக் குப்பால் கொடுத்திவண் வருக
[வென்றார்.

41. இருந்துகான் மடக்கி நீட்டி யெழுந்துடன் முறுக்கு நீக்கி
மருந்தெனு மமுதத் தீஞ்சொன் முகம்மதின் வதன
[நோக்கிப்
பொருந்திய கலிமா வோதிப் புகழ்ந்துடற் பூரிப்போடுந்
திருந்தவே டனையும் பார்த்துச் சென்றது கானின்
[மானே.

42. வெண்ணிலாக் கதிர்கான் றென்ன மென்முலை சுரந்த
[தீம்பால்
மண்ணெலா நனைப்பச் சூழ்ந்த வனமெலாந் திரிந்து
[தேடிக்
கண்ணினி லினங்கா ணாது கலங்கியோர் வனத்தின்
[கண்ணே
யெண்ணரும் பிணையுங் கன்றுங் கலையுட னினிது கண்ட.

43. மலைவற வினத்து ளாகி மனத்தினுட் கவலை நீக்கிக்
கலையினுள் வருத்தந் தீர்த்துக் கன்றினை யணைத்து விம்மு
முலையினை யூட்டி மென்மை முதுகுவா லடிநா நீட்டி
யலைதர வளைத்து மோந்து வேட்கையை யகற்றிற்
[றன்றே.

44. கன்றது வயிறு வீங்கக் கதிர்முலை யமுத மூட்டி
நின்றதன் னினத்துக் கெல்லா நெடிபடுங் கானி லோடி
வன்றிறல் வேடன் கையிற் படும்வச வாறும் தூதர்
வென்றிகொள் பிணையின் மீட்டு விட்டது மோதிற்
[றன்றே.

45. பிணையென வுரைத்த மாற்றம் பிணைக்குல மனைத்துங்
[கேட்டுப்
பணைபடு கானி லுள்ள பதைப்பொடுந் துணுக்கி நிற்பத்
துணையெனுங் கலையி னங்கஞ் சோர்ந்துநெட் டுயிர்ப்பு
[வீங்கி
யணைதர வடுத்து நோக்கி யாற்றுவான் றொடங்கிற்
[றன்றே.

46. மாறுகொண் டவர்கை தப்பி வந்தமா னினத்தின் சாதி
கோறலை விரும்பி முன்னு நார்கையிற் கூடிற் றுண்டோ
வேறுரை பகரேல் பார்ப்பை வெறுத்துமுன் னினத்தை
[நீத்து
மீறெனப் போதல் வேண்டா மெனுமுரை யியம்பிற்
[றன்றே.

47. என்னுயி ரதனை வேட னிரும்பசிக் கிரைய வீந்து
நந்நபி பிணையை மீட்ப நன்மனம் பொருந்தி லேனுற்
பொன்னுல கிழந்து தீயு நரகினிற் புகுவ தல்லாற்
பின்னொரு கதியு முண்டோ பிழையன்றிப் பெருமை
[யன்றே.

48. சிறப்புடைக் குரிசின் முன்னஞ் செப்பிய மாற்ற மாறி
மறப்பொடு மிருந்தே னாகில் வரிப்புலி யினத்தின்
[வாய்ப்பட்
டிறப்பதே சாத மல்லா லிருப்பதற் கிடமற் றுண்டோ
வுறப்பெரும் விருப்ப மென்மே லிருத்தலை யொழித்தல்
[வேண்டும்.

49. நதியிடை பெருக்கின் முன்னோர் நந்நபி நடக்கு நாளின்
மதியிலி யொருத்தன் வள்ளன் முகம்மதின் வசனமாறிப்
புதியநன் னீரு ளாழ்ந்து கொடியினில் வீழ்ந்து போய
வதிசய முலகில் விண்ணி லியாவரே யறிகி லாதார்.

50. இனத்தினை விடுத்து நீங்கி யிருங்கழிப் பிதயம் பூப்ப
வனத்தினி லேகுங் காலை மறிமுண மறிப்பச் சீறிச்
சினத்தது தடுப்ப வோடிச் செவ்விமான் முகத்தை
[நோக்கி
யினித்தவாய் புற்றீண் டாத விளமறி யுரைக்கு மன்றே.

51. மாதவம் பெற்று நின்போன் முகம்மது நபிகஞ் செய்ய
பாதபங் கயத்தைக் கண்டு பரிவுட னீமான் கொண்டு
போதலே யன்றி நின்னைப் புறத்தினி லகற்றி வாழே
னீதுமுத் திரையென் றோதி யெழுந்துமுன் குதித்த
[தன்றே.

52. இறையவன் றாதைக்கண்ட வதிஜய மீதுகொ லென்ன
மறிமன மறுகி லாது வதைதனைப் பொருந்திச் சேற
லிறுதியற் றின்ப நம்பா லெய்துமென் றகத்தி
[னெண்ணிச்
செறிவனங் கடந்து வேடன் றிசைதனை யடுத்த தன்றே.

53. குருளையும் பிணையுங் கூடி வருவது குறித்து நோக்கி
முருகவிர் புயத்தார் வள்ளன் முகம்மது மகிழ்ந்தன் பாக
விருளறு மனத்த னான வேடனை யினிது கூவி
யொருபிணைக் கிரண்டுன் பாலில் வருவதென்
[றுரைத்திட் டாரால்.

54. அன்னது கேட்டு வேட னேக்கியன் புற்ற காலை
முன்னிய கன்று மாறு முகம்மதி னடியிற் றாழ்ந்து
பன்னிய சலாமுங் கூறிப் பாவியேற் காக வேட்டு
மன்னிய பிணையை மீட்டு மெனுமுரை வழங்கிற் றன்றே.

55. மாடுறைந் திவைமான் கூற முகம்மது நபியும் விற்கை
வேடனை விளித்து நந்தம் பிணையினை விடுத்து நின்றன்
பீடுடை பசியை மாற்றிப் பெரும்பதிக் கடைக வென்றார்
வீடுபெற் றுயர்ந்து வாழ்கே னெனமலர்ப் பதத்தின்
[வீழ்ந்தான்.

56. பாதபங் கயத்தைப் போற்றிப் பருவர லகற்றி யாதி
தூதவ ரிவரே யல்லா லிலையென மனத்திற் றாக்கி

வேதநா யகமே யென்பால் விருப்புறுங் கலீமாத் தன்னை
யோதுமென் றிருகை யேந்தி யுவந்துநின் றுரைப்ப
[தானான்.

57. கருமுகிற் கவிகை வேந்தே கானக வேட னென்னு
முருவினன் விலங்கோ டொப்பே னுள்ளறி வுணர்வு
[மில்லேன்
தெருளுறப் பாவியென்னைத் தீனிலைக் குரிய னென்னப்
பெரிதளித் திடுதல் நுந்தம் பெருமையிற் பெருமை
[யென்றான்.

58. மதிமுக மகிழ்ச்சி கூர முகம்மது கலீமாச் சொல்ல
விதயமுற் றோதி வேட னினிதினி னீமான் கொண்டு
புதியனை வணங்கிச் செய்யுஞ் செய்தொழில் பொருந்தக்
[கேட்டு
நிதிமணிக் குரிய னாகித் தீனிலை நெறிநின் றானே.

59. பெறுகதி நின்னாற் பெற்றேன் பெரும்பவங் களைந்தேன்
[மாறாத்
தெறுகொலை விளைத்து முன்னஞ் செய்தொழி றவிர்ந்தே
[னீபு
மறுகலை யெறிந்து தேறு மனக்கலை யொடுகன் றோடு
முறுகலை யிடத்திற் போய்ச்சேர் கொழுகலை முயல்தி
[யென்றான்.

60. வானவர் பரவுங் கோமான் முகம்மது மானை நோக்கிக்
கானகஞ் சென்னி யென்றார் கமலமென் பதத்திற் றாழ்ந்து
தீனிலைக் குரிய வேடன் றன்னையுந் திருந்தப் போற்றி
நானிலம் புகலப் பாரி னடங்கினஞ் சேர்ந்த தன்றே.

61. தேனைக்குங் குமங்கள் சிந்தச் செழித்தநின் புயத்து
[வள்ளல்
கானைக்குவ் விடத்திற் காட்டுங் கமலமென் பதத்தைப்
[போற்றித்
தானைக்கும் பதிக்கு மியானே தலைவனென் பவர்போல்
[வேடன்
மானைக்கொண் டுவரப் போயி மானைக்கொண் டகத்திற்
[புக்கான்.

62. துடவைநன் மலரைத் தூற்றுந் தூய்நிழ லிடத்தை
[நீங்கிப்
படர்முகிற் கவிகை யோங்கப் பாருள தெவையும்
[வாழ்த்த
வடவரை யனைய திண்டோள் வயவர்க ளினிது சூழக்
கடிமனை யிடத்திற் புக்கார் ஹபீபுற சூலு மன்றே.

# தேம்பாவணி

## ஐயந்தோற்றுபடலம்

1. மாசறு துறவோரன்ன வடதிசை உள்ளி வெய்யோன்
காசறு மேடமுற்றுக் களித்த பங்குனிநாள் கன்னி
ஆசறு கடவுளெய்தி அவதரித் துடலம் போர்த்த
ஏசறு காதைபாட இணையவன் அடிமேற் கொள்வாம்.

2. தண்படு கொழுகொம் பூன்றித் தலைபடர் வல்லியென்ன
தெண்படு மதுப்பூவாகை சேர்த்த நற்றுணை வனோடு
விண்படு முடுக்கள் சூழ்ந்த விரைக்கொடி கன்னி [யிவ்வா(று)
எண்படும் அளவற்றுய்ந்த ஈரறம் புணைந்த நாளில்.

3. குணிக்கருங் கருணையார்ந்த குணத்தை ஆறமைந்த [நாதன்
தணிக்கருங் குறுங்கை வென்று தரணியைப்புரந்து [காக்கக்
கணிக்கரும் வளமை பூத்தகன்னியின் வயிற்றில் தான் [ஈங்(கு)
அணிக்கரு முறையால் மைந்தனாக வுட்கருத் துற்றானே.

4. மணமுடித் தேழாந்திங்கள் வளர்ந்து தேய்ந்தொழுகா [முன்னர்
கணமுடிக் கன்னியுள்ளங் கனிவியைந் தமையக் கஞ்ச
மணமடல் குவியுங்காலை வந்த பங்குனி ஐயைநாள்
கணமெனக் கபிரியேலைக் கடவுளே விடுத்தா னன்றே.

5. தூதுரை வலியோனாய கபிரியேல் சுடரைச் சூட்டிக்
கோதென இருளைநீத்த கோதைகண் விரைவிற் சென்று

சீதவெண் மதியந்தாங்குஞ் சேவடி பணிய வீழ்ந்து
போதிநின் றிழிந்ததேனைப் பொருது வெல்லுரை
[யுற்றனே.

6. பொய்யகன் றுயர்ந்த தெய்வப் பூரண வோகை யாளே
ஐயகன்று வப்பில்நாதன் அடைந்து வாழ்நெஞ்
[சத்தாளே
வையகத் திருமை வாய்ந்த மாதருளெண்ணி லாசி
துய்யகம் பொலியப்பூத்த சுந்தரி வாழி யென்றான்.

7. கனிப்பொறைக் கியையக்கோடு வளைவபோற்
[கருணையார்ந்த
நனிப்பல வறங்கள்பூத்த நறுமையிற் பொருவாக் கன்னி
தனக்கள வகன்றஆசி சாற்றிய சொல்லை ஆய்ந்து
மனத்தகத் துளைந்துநாணி வரைந்த வோவியமே
[போன்றாள்.

8. கலங்கின வகத்துந் தெண்ணீர்க்கடல் அளறுகா
[வண்ணம்
மலங்கின வகத்துங்கன்னி மயக்குறா தானாற்
[றேங்கித்
துலங்கின வகத்துள்ளே வல்துடர் நெறிதோற்று
[வாயென்(று)
இலங்கின வகத்துள் உள்ளி யிறைவனை வணங்கச்
[செய்தாள்.

9. பளிங்கடுத்த வற்றைக்காட்டும் பான்மை யாலிவள்
[முகத்தில்
உளங்கடுத்த வற்றையோர்ந்த கபிரியேல் உறுதி
[சொல்வான்
விளங்கடுத் திறைவற்கன்பு மீதுற உவகை பூத்து
வளங்கடுத் துயர்ந்தமாதே மயக்குற வருந்து வானேன்.

10. மதிபழித் திலங்குசங்கின் வாய்ந்த சூழ்பழித் தீங்குள்ள
விதிபழித் தரியவாற்றல் வேய்ந்த தோர்க ருப்பமாகி
நிதிபழித் துயர்ந்த தோன்றல் நீபயந் தவற்கியேசு
துதிபழித் துயர்ந்த நாமம் சூட்டுவாய் கன்னிமாதே.

11. அளியமைந் துயர்ந்த செம்மல் அநந்தன் சேயென்ன [நேமி
உளியமைந் தரசுதாவித் துயர்ந்த கோலோச்சி நாளும்
களியமைந் தளித்த பாரில்காவ லென்றான் வானென்ன
நளிபமைந் தினியசொல்லை நவின்றடி வணக்கஞ் [செய்தான்.

12. தொய்யலுற் றிறைவன் தாளைத்தொழுது வாழ்திருவல் [லோனே
மய்யலற் றழிவிற்கன்னி மைந்தனைப் பெறுத லேதென்(று)
அய்யமுற் றிவள்வினவ அரியமா தடியைப் போற்றி
வெய்யிலுற் றடைந்ததூதன் விடைமொழி யுரைப்பான் [மன்னே.

13. காருலாமுலகும் ஆங்கு கதிருலாஞ் சுடரை யெல்லாம்
காருலாமுலகும் யாவும் காரண மொன்று மன்றிச்
சீருலாம் வயத்தநாதன் செய்தலின் மகவை யீன்றுஞ்
சீருலாம் கன்னியாதல் சேர்த்தலே அரிதென் பாயோ.

14. மகற்பெறு வயதுமுற்றி மைமையாம் எலிச பெற்றுந்
தகற்பெறு கருப்பமாகித் தவன்ற வெண்டிங்க ளாறாய்ப்
பகற்பெறு கன்னியாய்நீ பழுதிலாச் சிறுவ னீனல்
இகற்பெறு வினையென் றாலும் இறைய வற்கெளிய [தன்றே.

15. ஆவது கடந்த காட்சிக் கருந்தவன் ஈசயீசன்
கோவது மின்றிக்கன்னி யொருமக வுயிர்ப்பா ளென்னக்
கோவது இறைவன் சொன்ன கூற்றினை வுரைத்தல் [பொய்யா
யாவது மறிதியல்லால் யானினக் குரைப்ப தென்னே.

16. நேயமாம் பிரீத்துசாந்து நிழன்ற தண்கவியைக் கிழ்நீ
தாயுமாய் ஒன்றுமூவர் தமிற்சுதன் தன்னை யின்றுந்
தூயமா கன்னிக்கே தங்கோன் றிலாச்சுடரின் ஊங்கும்
ஆயமாய்க் காக்குவாமெனன் றஞ்சலி செய்திட்ட டானே.

17. தேற்றுரை யுரைத்ததூதன் செப்பிய யாவுங் கேட்டு
வேற்றுரை யுரைத்திலாளுள் விழைவுற இறைவன் [றனைப்
போற்றுரை யுரைத்துக்கேட்ட புதுமையை யோர்ந்து [சாவி
யேற்றுரை உடைத்தகன்னி யிரவெலாம் போக்கினளே.

18. அருள்புறங் கண்டசெல்வத் தமலைமுன் னெளிமையுள்ளி
வெருள்புறங் கண்டுகூசி வெறுத்தலோ டமைதல் [தேற்றுள்
தெருள்புறங் கண்டமீனில் திருமுகத் தொளியில் வீச
இருள்புறங் கண்டபாரிற் கெரிவிளக் கொப்ப நின்றாள்.

19, இன்னவாய் உசாவும்வேலை யிளம்பிடி யன்ன வோர்நற்
கன்னிவாய் மொழியைக்கேட்பக் கடவுளுங் கடவுள் [தன்னைத்
துன்னிவா ழமரர்யாரும் துகள்தவிர்ந் துலக மெல்லாம்
அன்னவா யுய்யுமென்ன அவாவொடு நிற்பா ரன்றே.

20. சூழ்திரை யுடுத்தபாரில் தோன்றிய நவத்தைக் [காண்டற்(கு)
ஆழ்திரை விரைவினீக்க ஆதவன் கதித்துத் தூண்டுங்

தாழ்திரை யாழ்ந்த பாய்மாத்தழல் சினத்துயிர்த்த [தென்னக்
கீழ்திரை கவிந்தவானம் கேழொளி சிவந்த தன்றே.

21. நன்னிலா வுதயத்தெந்தை நயப்புற வியப்ப வானோர்
மன்னியா மெவரும்வாழ்க வந்தவா னவனை நோக்கிக்
கன்னிதாழ் சிரத்தைக்கோட்டிக் கடவுளுக் கடிமை [யின்னே
பன்னியா யினகின்வாய்ச் சொற்படி யெனக்காக [வென்றாள்.

22. என்றுளி கடுத்தவன்பால் இதயங்கூர்ந் துயிர்த்த வெந்நீர்
மின்றுளி மூன்றுஞ் சேர்ந்தோர் மெல்லுடலாய் [உள்ளாவி
சென்றுளி மனுவும்வாய்ந்த தெய்வமும் பொருந்த வீக்கி
ஒன்றுளி யிறைவன் மைந்தன் ஓர்மனு மகனுமானான்.

23. மீயகன் றுயர்ந்த மாண்பாள் விளங்கவே யுலகமூன்று
மாயகன் றென்றுநீத்தை யாயிரத் திருநா றாண்டிற்
பாயகன் றொளியின் சான்றோன் படரிருள் [நீக்குமுன்னர்
நாயகன் மருளைநீக்க நரனென வாயி னனே.

24. ஆதனே விதித்தநாளும் அமையமு மாகும்வேலை
யேதமே விளைத்த ஆதனிழி வொழித்துயிர்கள் யாவும்
நாதனே யளிப்பச் சுங்கன் நாளிலே யுதித்துமுன்னோர்
வேதமே யுரைத்த வண்ணம் விகலமற்றுயிற் றன்றே.

25. யாழிசைபழிப்ப வானோர் இனிதெனப் பாட ஆங்கும்
ஆழலைபழிப்பத் தொய்யலார்ந்த தாய்நயப்ப வெய்யோன்
கேழொளிபழிப்ப அன்னமனை யொளிகிளர்ப்ப வானில்
வீழுறைபழிப்ப எங்கும் விழுநயன் பொழிந்ததன்றே.

26. பளிக்குவேய் செப்பிலுண்ட பருதிரு ளெறிக்கும் [வில்லாற்
றெளிக்குமே போலுந்தேன் பெய்செழுமலர் முகைகள் [மோதம்
அளிக்குமே போலும் வாய்ந்த அன்னமா [கன்னிமாட்டெவ்
வுளிக்குமே மணமும் வில்லும் ஒளிமுகத் [தொழுகிற்றம்மா.

27. சேயெனத் தன்கண்வந்த வேதனை வணக்கஞ் செய்து
தாயெனத் திறம்பாக் கன்னிதன் னுயிர் கிளர்ப்பத்தாறில்
தூயெனத் துளிர்த்தமாரித் தொகையின்மேல் வரங்கள் [வாரும்
வாயெனக் கண்டவானோர் வாய்புகைத் தஞ்சா நின்றார்.

28. அஞ்சிய வணக்கத்தோடும் அஞ்சலி செய்து தாயும்
துஞ்சிய உயிர்களுய்யத் துடர்பொடிங் கெய்தி யார்வம்
விஞ்சிய சேயும் வாழ்த்தி விரும்பிவா னுயர்வாழ் [வீட்டை
யெஞ்சிய விழுப்பத்தோங்கி யினிமையாப் பாடாநின்றார்.

## வேறு

29. வாழுவானு ளேரியாமு மருகுநன்றி மேலுயர்ந்
தாழுமாழி சூழுபாரி லரிவையுண்ட தேவருட்
சூழுளுலி தாயபோது சுடரெரிந்த வானுமேற்
றாழுபூமி யேறவாய தகவுவாடி லாவதே.

30. வாடிலாது மாறிலாது மணமெறிந்த பூங்கொடி
கேடிலாது லாவுதேறல் கிளரரும்பு சூலுறி
பீடிலாது ஞாலமேவு மிழிவமைந்த நோயறக்
காடியாவும் வாசமாரு கனியையீனு நாளிதே.

31. நாளிதே யுவப்பஞால நசையமிழ்ந்தி ராவறக்
கோளிதே கடுத்ததீது கொணர்குணுங்கி ஞெயற
வாளிதே பிழைத்தநீச மனுமலிந்த கேடறப்
பீளிதே வியப்பவீடு பெறுவுகின்ற நாமுமே.

32. பெறுவுகின்ற நாமவாகை பெருகுகின்ற வேலிஞு
ஞுறவுகின்ற ஞாலம்யாவு முளையவந்த பீடைக
ளிறவுகின்ற காலமாக விளவனின்ற நாதனைத்
துறவுகின்ற நாலினோடு துதிசெய்கின்றி யாவரே.

33. துதிசெய்கின்றி யாருமுண்டதுகள் துடைத்தநன்றியால்
விதிசெய்கின்ற வேதநின்று மிகைதுடைத்த [ஞானமாய்க்
கதிசெய்கின்ற வீறகன்ற களிவுருக்கு வான்மிசை
பதிசெய்கின்று வாழவொன்று பரிசிலக்க மாகுமோ.

34. இலக்கமாக நேமிமீதி லினிதெழும்ப தங்கனி
யுலக்கமாக வீதிதீத ரொழுகலின்றி யுண்டதோம்
விலக்கமாக நாதனாகி மெலியமைந்த னென்றுளாய்க்
கலக்கமாக நேமிதேயு கடியகங்க லங்கவே.

35. அகங்கலங்க முனையுடன்றி யழிவுகுங்கு ணுங்கினம்
நகங்கலங்க வுருமிழிந்த நடையில் மண்டெரிந்ததீச்
சகங்கலங்க வெருவடைந்து கடிதியின்றி ழிந்ததா
முகங்கலங்க வுறுமாந்தை முடியமண்ட லங்களே.

36. மண்டலங் களங்கமெங்கும் வாரிமாறு வான்முகன்
கண்டலங்க ளுங்கலங்கு காலுஞான காந்தியால்
விண்டலங் களங்கணின்ற மீனுநாண வேய்ந்தரு
லெண்டலங்க ளெங்குநன்றி யீறிலா மலீகுமே.

37. ஈறிலாமலேகி மூடரீங்கு தேடு சீரொலாஞ்
சேறிலாத செறுவில் விட்டசிதடர் செந்நெல் வித்ததே

மாறிலாது நீடுவாழ்வு வானநாத னீகுவான்
பேறிலாதமனு வொடொத்த பிணியருந்த வுற்றுளான்.

38. உற்றமீனும் வானும் வானமுற்றயாமு மோயுமீ
றற்றவானை யோடுகூச திர்ப்பில் வாழ்த்து நாதனைக்
குற்றமாறி வாழுகோதை குக்கிசூழ வாயசூல்
சொற்றவாய சிரதோ தொடுத்த பாவின் மாலையால்.

39. கொடுத்த பாவை கிகரீதி துடருநூலின் முறையினால்
அடுத்த மூவுலகமி யாவும் அரியமூன்று விரலினால்
தடுத்தவீர எதிரிலாது தகவில் தாங்கு பரமனை
உடுத்த சூலில் அரிதில்தாங்கும் உவமியதோர்
[விறலியே.

40. விறலியா னுயிர்த்த பாலன் விறலினா லுயர்ந்தரா
மறலினா லமைந்ததீது மரபினா லமைதறத்
திறலினால் மிகித்த கூளி சிரமெலா நெரிந்தடும்
மிறலினா லுகுத்த பாவம் விலகுவான் விளங்குவான்.

41. வான்விளங்க மண்விளங்க வந்தநாதன் வாழியே
மீன்விளங்க லேய்ந்தமுத்து வேய்ந்தசிப்பி வாழியே
கான்விளங்க வுயிரளிக்கும் கனியிராயன் வாழியே
தேன்விளங்க முகைவிலாது தேறுகன்னி வாழியே.

42. வாழிமைந்த ருய்யமைந்த னாயநாதன் வாழியே
வாழிநன்மை யீகஇன்மை மலிதயாபன் வாழியே
வாழிவாழும் வானின்வாழ்வு மண்ணின் வாழ்வு வாழியே
வாழிகருணை யாழிவாழி மதுரவாழி வாழியே.

43. என்றுபாவ ழங்குமாரி யித்திரத்து குத்தபின்
மன்றுபூவ ழங்குமாரி மட்டினத் திறக்கிய
கன்றுநீர்வ ழங்குமாரி கற்றைவிட்ட மாரியும்
குன்றுமேல்வ ழங்குமாரி குறையெனப் பரப்பினர்.

# குசேலர்

## குசேலோபாக்கியானம்

1. பருமணிச் சுடிகை பஃறலை யரவம்
படரொளி மேருவைப் பொதிந்தாங்
கிருளற விமைக்குங் கதிரொளி சமழ்ப்ப
எறிகதிர்மணிபல வேந்தி
மருவுவெள் ளருவி பொதிதர வான்றோய்
மால்வரை செறியமிக் குயர்ந்த
பெருவரை முடியி லுள்ளதொன் றளவாய்
பெருந்தவ முனிவர்தஞ் சேரி.

2. ஆங்கதிற் குசேலப் பெயரினோன் முனிவர்
அருங்குலத் தினியபாற் கடலில்
பாங்குறு மதிபோற் றோன்றினோன் வண்டர்
பாண்செய மணநறுக் கொழிக்கும்
பூங்கம லத்தில் வாழ்பொறி யிலங்கும்
பொருப்பன நிறத்துமால் பதத்தைத்
தாங்குறு முளத்தன் பொறிகடீச் செயலில்
சார்வுறு தடக்குறு மேலோன்

3. திறலியை தவத்திவ் வாறு திகழ்ந்திடுங் குசேல
[னென்பான்
உறலியை யத்தவத்திற் குதவிசெய் பாக்கு நாளும்
அறலியை கதுப்பி னாளோ ரணங்கினை வதுவை
[செய்தான்
மறலிய மன்னர் சென்னி மணிமுடி யிடறுந் தாளோய்.

4. மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள் கொண்க னினைப்பறிந் தொழுகு
[நீராள்

தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திட லென்று மில்லாள்
பேசுதிண் கற்பு வாய்த்தாள் பெற்றதே கொண்டு
[வப்பாள்.

5. மலையிட்ட செல்வத் தார்கண் மகிழ்வோர் மகவுந் தாரான்
அலையிட்ட முட்டாட் செய்ய வம்புயத் துறைவோ
[ளோரேழ்
தலையிட்ட விருபான் மைந்தர்த் தந்தனன் பெருமை
[யன்றோ
சிலையிட்ட தழும்பு வாய்ந்த தெரியலந் தடந்தோள்
[வேந்தே.

6. பல்லெல்லாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற்
[கூட்டிச்
சொல்லெல்லாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து
[நீட்டி
மல்லெல்லா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெல்லா மிரந்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும்.

7. இருநிலத் தியாவர் கண்ணு மேற்பதை யிகழ்ச்சி யென்ன
ஒருவிய வுளத்தான் காட்டி லுதிர்ந்துகொள் வாரு மின்றி
அருவிய நீவா ரப்புற் றுணிய மாராய்ந் தாராய்ந்
துருவவொண் ணகத்தாற் கிள்ளி யெடுத்துடன் சேரக்
[கொண்டு.

8. வந்துதன் மனைக்கை நீட்ட வாங்கிமற் றவற்றைக் குற்றி
அந்தமெல் லியல்பா கஞ்செய் ததிதிக்கோர் பாகம்
[வைத்துத்
தந்ததன் பங்க யின்று தவலரு முவகை பூத்து
மந்திர மறைகட் கெட்டா மாலடி நினைந்தி ருப்பான்.

9. இற்றிவன் வாழ்கைத் தன்மை
யிருபத்தேழ் மைந்த ருக்கும்
மற்றவப் பாகக் கஞ்சி மட்குழி
சியைப்பால் வைத்துப்
பற்றுகோ ரிகையான் மொண்டு
வாக்கிப்பற் றுமை கண்டு
வெற்றுடம் பாகி நிற்பண்
மெலிவள்பி னென்செய் வாளால்.

10. இவ்வாறு மிடியென்னும் பெருங்கட லு
ளழுந்தியுந்தற் கினிமை சான்ற
செவ்வாய்மை யந்தணனை வெறுத்துரையா
ளவர்மொழிகள் சிறிதுஞ் செப்பாள்
துவ்வாமை மைந்தர்கள்பான் மறந்துமியற்
றுளவடன் சுகுண மென்னே
எவ்வாறித் துயர்க்கடனீந் துவமெனுமோ
ரெண்ணமுளத் தென்று முண்டால்.

11. தரித்திரமிக்க வனப்பினை யொடுக்கிச்
சரீரத்தை யுலர்தர வாட்டும்
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்பும்
சாற்றரு முலோபத்தை மிகுக்கும்
தரித்திரந் தலைவன் றலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திர மவமா னம்பொய்பே ராசை
தருமிதிற் கொடியதொன் றிலையே.

12. யாதவர் குலத்திற் றோன்றிய வரசர்
யாவர்க்கு மதிபனு மிணையில்
மாதவ னுடனீ பலகலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார்

ஆதலி னப்பீ தாம்பரன் மருங்கில்
அணைந்தவன் பாற்பெருஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்துநஞ் சிறுவர்
செல்லனோய் தவிர்க்குதல் வேண்டும்.

13. இளமையி னின்றோ டிருங்கலை கற்ற
எழிலிபோல் வண்ணனிற் கண்ட
அளவையே யெல்லாப் பேசரும் வளமும்
அளிக்குவ னையம தின்றால்
பளகறு நேச னொருவனைப் படைத்தல்
பருந்தனப் பொதிபெற்றாற் போன்மென்
றுளமிகுந் தெளிந்தோர் புகலுநன் மாற்றம்
உண்மையாம் பொய்ம்மையா காதே.

14. கண்ணனைத் துளப மாலிகை நிறத்தில்
கமலைவாழ் தரவருள் புரிந்த
மண்ணிய மணியைத் தினந்தினம் போற்றும்
மாசறு தவத்தின ருள்ளத்
தெண்ணிய வெண்ணி யாங்களிப் பவனை
எய்திநஞ் சிறாருயச் செல்வம்
நண்ணிவா வென்று நங்கைசொற் றிடலும்
நற்றவக் குசேலனீ துரைக்கும்.

15. மக்களுக் கிரங்கி வாடு மடத்தகை
யணங்கு கேட்டி
தக்கமுற் பவத்தி லான்ற கருமநன்
கியற்றி னோர்கள்
ஒக்கவிப் பவத்தி லின்ப மொருங்கலு
பவிப்பவ ரின்றேல்
மிக்கவெந் துயரத் தாழ்வ ரிதற்குளா
மெலித லென்னே.

16. மைந்தர்க டம்மைப் போற்ற வளநிதி
வேண்டு மென்றுப்
நந்திய பறவை கான நயந்துறை
விலங்கு முன்னு
வந்தபல் லுயிர்க்குச் சேம வைப்புண்டோ
வருவா யுண்டோ
எந்திடத் தேனும் போமியான் றிரப்பது
தானு முண்டோ.

17. அல்லது நாளைக் கென்செய் வாமெனுங்
கவலை யுண்டோ
எல்லையி லொன்றி னுமிலான் றிடிப்புண்டு
வாழ்த லுண்டோ
ஒல்லுமவ் வுயிர்க டம்மு ளுணவிலா
திறந்த துண்டோ
சொல்லரி பரந்த வுண்கட் டுடியிடைப்
பேறை மாதே.

18. கல்லினுட் சிறுதே ரைக்குங் கருப்பை
யண்டத் துயிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும் புனத்துளாய்க்
கண்ணி யண்ணல்
ஒல்லுநின் மைந்தர்க் காவா தொழிவனோ
வொழியா னுண்மை
மெல்லியல் கொண்ட துன்பம் விடுவிடு
மறந்து மெண்ணல்.

19. ஆதலி னினது மைந்தர்க் காயுளுள்
ளளவை காறும்
ஓதிரு வினைக்குத் தக்க வுணவுண்டு
புந்தி மாழ்கேல்

ஏதுவங் தானு மூழா லெனநினைங்
திருத்தல் வேண்டும்
மாதர்வாண் முத்த மூரன் மயின்மரு
ணடைப்பூங் கொம்பே.

20. அந்தண னுரைத்த மாற்ற மனைத்துமஞ்
செவியி லேற்றும்
நந்தலி லுண்மை யீதென் றுணர்ந்துந்
தானயந்து பெற்ற
மைந்தர்பால் வைத்த வாசை மயக்கரு
ளாகிப் பின்னும்
புந்தியின் விரும்பிப் பாதம் போற்றிநின்
றிதனைக் கூறும்.

21. கலைமுழு தோர்ந்து கரிசெலா மறுத்த
காந்தனே பருமணி யாவத்
தலைகிடந் திமைக்குந் தாத்திரி யதனில்
சாற்றருந் தக்கநன் முயற்சி
உலைவறப் புரியா வொருவனுக் கெங்ஙன்
உற்றிடுஞ் செல்லவநன் னிலத்தை
நிலைபெற வுழுது வித்திலான் றனக்கு
நீள்பய னுற்றிடுங் கொல்லோ.

22. மடமையேன் றனக்குக் கடவுளு நீயே
வகுக்கரு மிறைவனு நீயே
அடலுறு தானந் தவமுதல் யாவும்
ஆற்றுநின் பணிவிடை யன்றோ
மடலவிழ் துளப மாலிகை புனைந்த
வாசுதே வன்பத மலரைத்
திடமுற நெஞ்சத் துன்னிவல் வினையைச்
சிதர்தரச் செகுத்த மாமறை யோய்.

23. வெண்டிரை வீசுங் கருங்கடற் புடவி
விண்ணகம் பாதல மிவற்றுள்
மண்டிய வுயிர்க ளெவற்றையுங் கமலை
மரர்பினன் புரப்பனே யெனினும்
அண்டர்கள் புகழு மையநீ யுயிர்த்த
அரியமக் களையுமென் றனையும்
பண்டைநாற் கியையப் பாதுகாத் தளித்தல்
பகருநின் கடனெனப் பகர்ந்தாள்.

24. தெறுநி ரப்புளோர் வாழ்ந்திடு செல்வர்பால்
செல்வரேன் மதியார்கள்
மறுவு றுத்தவ மானமு மியற்றுவர்
மானமுள் ளவராயின்
குறுகு மவ்வவ மானத்தா லுயிர்விடு
கொள்கையிற் றலைநிற்பார்
நறும லர்க்குழா லாதலா லவரிடை
நண்ணனன் றெனவெண்ணல்.

25. ஒன்றும் வேண்டல ராயினுஞ் செல்வர்பால்
உறுமிடியவர் சார்ந்தால்
இன்று வந்தமை யாதினைக் கருதிமற்
றிவரென வுளத்தெண்ணிக்
கன்று மாறுபல் குறிப்புரை நவிற்றுவர்
காதலி னவர்பாற்போய்
மன்ற வந்தது சிறுமையே யிவர்க்கன்ற
மற்றிலை யறிபாவாய்.

26. இந்த வாறிவ னுரைத்தலென் னெனவுளத்
தெண்ணிடே லெக்காலும்
பந்த மானிடர் தன்மையிற் றெனப்பகர்ந்
தேன்பரம் பொருளாய

சந்தமா மறைத் தலைவன்பா லுறுவது
தகாதென்றே னலன்கண்டாய்
எந்த வாறுகை யுறையிலா னையன்முன்
யான்படர் குவன்மாதே.

27. என்றுரைத்த கொழுநனுரை கேட்டுமகிழ்ந்
திதற்கென்னோ செயலென் றெண்ணி
அன்றமுத லுபவாசந் தானிருந்து
மாமுனிவன் அரிதிற் றேடி
நன்றளிக்கு நெல்லினிற்றன் னொருபாகம்
வேறெடுத்து நலக்கச் சேர்த்துத்
துன்றியவந் நெல்லையொரு தினத்தறவி
னனைத்துவறுத் தெடுத்துத் தூய்தா.

28. கறையிட்டு நனிகாண வுலக்கைகொடு
மிக்கிடித்துக் கரிசு போக்கி
நிறையிட்ட வவலாக்கிக் குசேலமுனி
கந்தையினில் நேடி யோர்பால்
மறையிட்ட வொழுக்குடையாண் முடிந்துகொடுத்
தினிதுபோய் வருக வென்றாள்
சிறையிட்ட பவநீங்கும் வழிகண்டோன்
வழிதேடிச் செல்ல லுற்றான்.

# இரக்ஷணிய யாத்திரிகம்

## உயிர்த்தெழுதல்

1. பொங்கரு ளுதன் பூதல ரக்ஷை புரிவான்வந்
தங்கப்ப்வ ருந்தி ஆருயிர் நல்கி அவனிக்குள்
மங்கிஅ டங்கக் கண்டுச கிக்க மாட்டான்போல்
வெங்கதிர் உட்கிக் குடகட லிற்குப் புறவீழ்ந்தான்.

2. பாயொளி மட்கிப் போயது வெள்ளிப் பகலோனும்
மீயொளி மல்கி மேற்றிசை துற்றி விரிசெக்கர்
நேயமி குத்தோர் காயம்உ குத்த நிறைசோரி
தூயசி னத்தீ மாயஅு டர்த்துத் தொகல்போலும்.

3. நன்றிம றந்து நட்பிடை நாளு நயவஞ்சந்
துன்றிய கள்வர் நன்றியில் செல்வந் தொலைவெய்த
ஒன்றிவ ருத்தும் வன்மிடி போல ஒளிர்செவ்வான்
நின்றில தாக வந்தது மாலை நிமிர்கங்குல்.

4. பூவணை யாகக் கண்படை கொள்ளும் புனிதற்கோர்
மேவுவி தானம் என்னவி ரிந்த மேல்வான்மீன்
ஓவற எங்கும் பாயிருள் நக்கி ஒளிகாலுந்
தீவம தாகஉ தித்தது கீழத் திசைதிங்கள்.

5. சித்திர மாகச் செல்வன்உ றங்குஞ் செயல்கண்டு
நித்திரை பங்கம்உ றுதமை வுற்றிடு நெறிபோலும்
எத்திசை யுமுள எப்பொரு ளும்உல கெல்லாமும்
அத்தின ராவினி சத்தம தாய வருங்காட்சி.

6. காலமி தாக வன்மன யூதர் கதித்தோடிச்
சீலமில் மன்னன் பாலணை வுற்றுத் திருட்டாகக்
கோலிஉ யிர்த்தான் என்றவன் ஆக்கை கொடுபோகிச்
சாலம ருட்டிச் சீடர்பல் கேடு சமைப்பாரால்.

7. ஈண்டொரு மூன் றுதி னத்துயிர் பெற்றெழு வேனென்ன
மாண்டவன் ஓதிய துண்டுச மாதியை மற்றின்னே
காண்டகு காவல்அ மைக்கென ஒப்புரை கைக்கொண்டு
வேண்டிய வாறுபல் வீரரை வைத்தனர் வெங்காவல்.

8. இட்டனர் முத்திரை ஏமமு றத்தனி ஈமத்தின்
முட்டிய டைத்தவோர் கற்கத வத்தினை முற்றாக
அட்டதி காந்தமும் அம்பர மும்மிதோர் அங்கைக்குள்
இட்டனம் உய்விலை என்பவர் போன்மதி இல்லாரே.

9. கோலிய காவலர் ஏகிக ளோடுகு ழீஇச்சேம
வாலிய வைப்பைவ ளைத்தனர் நின்றிட வாராந்தக்
காலைக டும்பகல் எற்படு காலைக டந்தந்தி
மாலைக ழிந்ததி யாமமும் வந்தும ரீஇயிற்றால்.

10. கைவரு லௌகிக வேலைக ழிந்துக ருத்தொன்றித்
தைவிக நாள்அனு சாரிக ளாயுயர் சற்போதர்
உய்வரு ளுதன்உ யிர்த்தெழு வேன்என உய்த்திட்ட
மெய்வச னத்திறம் உள்ளிஇ ருந்தனர் விழிதுஞ்சார்.

11. மாசில்ம டந்தை மார்சிலர் கந்த வருக்கங்கள்
ஆசற வீட்டி ஆதிதி னத்தின் அதிகாலை
ஈசன்உ டற்குப் பூஜிதை செய்வாம் எனஎண்ணி
நேசம்வ டிக்குங் கண்ணேடி ருந்தார்நிசி முற்றும்.

வேறு

12. இருநிலம் உய்யக் கொண்ட
எம்பிரான் ஆக்கை ஈமம்
மருவிய வாறீ தாக
மறுத்துயிர்த் தெழுந்த உண்மை
திருமுறை கிளக்கும் வண்ணந்
தெரிப்பல்என் றமலற் போற்றிப்
பொருவரும் பத்தி என்னும்
புனிதைமேற் புகல்வ தானேன்.

13. மைந்தர்கள் நம்பி ராணிம்
மாநிலத் துயிர்த்தெ ழுந்த
விந்தையைத் தரிசித் தேத்தும்
விழைவினுல் விபுதர் ஆவார்
அந்தரத் தீண்டிப் பல்லாண்(டு)
அணியிசை யலர்த்து மாபோல்
சிந்துநீர்ச் சுனையுங் காவும்
புள்ளொலி சிறந்த மாதோ.

14. விண்ணுற நிவந்த நாளு
வியன்கிளைப் பொதும்பர் மென்பூஞ்
சுண்ணமு மலருந் தீந்தேன்
தொகுதியும் வானந் தூய
ஒண்ணிறப் பனிநீ ரோடு
கலந்துமென் கால்கொண் டோச்சல்
புண்ணியன் எழுச்சிக் கோலம்
புனைந்தெனப் பொலிந்த தன்றே.

15. மருப்படி கமல வாவி
மறிதிரை முழவம் ஆர்ப்ப
அருப்புகாண் மலர்வாய் கிண்டி
அளிபசுந் தேறல் மாந்திச்
சுருப்பிசை சுருதி காட்டப்
புள்ளொலி இசையிற் றுன்னத்
திருப்பள்ளி எழுச்சி கூடுஞ்
செவ்வியை ஒத்த தம்மா.

16. கோதிலாப் புனித அன்பு
குலவுநீ ரகத்து நம்மான்
பாதபங் கஜம லர்ந்த
பரிசெனப் பளிங்கிற் றோன்றுஞ்

சீதநீர்ப் பொய்கை எங்குஞ்
செழுங்கடி கமழுந் தூய
மாதர்மென் கமலப் போது
வள்ளவாய் மலர்ந்த மாதோ.

17. வையகம் புதைத்த கங்குல்
வாருணி யற்ற நோக்கித்
துய்யதண் மதியம் என்னுந்
துயல்வரு சுறவத் தோடு
மையற விளங்கும் வான
மீன்ஒளி மழுங்கி மாய
வெய்யவ வலைஞன் றோன்றான்
விடிவலை வீசி னுைல்.

18. மெய்கண்ட விடத்துப் பொய்மை
வெருக்கென வெருத்த திந்து
கைகண்ட களவின் ஆக்கங்
கரந்தெனக் கரந்த விண்மீன்
பொய்கண்டு மருண்ட உள்ளம்
போலொழி இழந்த தீபம்
மைகண்ட கங்குல் வாட்டும்
வைகறை கண்டு கட்டே.

19. இன்னதோர் அமையந் தன்னில்
இருநில உலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய
பரகதிப் பயனை ஈட்டித்
துன்னிய ஜடவி யோகத்
துயிலுணர் ரூட்சி யேபோல்
உன்னத தேவ மைந்தன்
உயிர்த்தெழுந் தருளிப் போந்தார்.

20. வார்த்தையாய் நடுவர் ஆகி
மன்னுயிர்க் கிரக்ஷை நல்க
மூர்த்தியாய்ச் சமாதி கூடி
முறைவழா துயிர்த் தெழுந்த
தீர்த்தனைத் தரிசித் தேத்தி
ஜெயஜெய என்று போற்றிக்
கீர்த்தன நறும்பூ மாரி
பெய்தனர் கெழுமி விண்ணோர்.

21. தன்மமுந் தவமும் ஓங்கித்
தழைத்தன அருள்மெய் வேத
கன்மமும் ஒழுக்கும் வல்லே
கதித்தன கருணை பூத்த
நன்மையு மெய்மை தானு
நடநவின் றுலகம் எங்கும்
வன்மமும் பகையுந் தேய
வளர்ந்தன மருவி மாதோ.

22. அறங்கலை யெடுத்த தொல்லை
ஆரணத் துழனி ஓங்கிச்
சிறந்தது ஜென்ம தோடத்
திக்கரு மத்தின் மூழ்கி
இறந்துபாழ் பட்டோர் ஆவிக்(கு)
ஈறிலா ஜீவன் வந்து
பிறந்தது சுகிர்த போதம்
பிறங்கிய தவனி எங்கும்.

23. ஆயபேர் அன்பு மல்கும்
ஆழியின் உதித்து மாந்தர்
மீயுயர் விண்ணோ ராக
விளங்குபுண் ணியமே தாங்க

ஆயிரங் கரங்கள் ஓச்சி
அலர்பரஞ் சுடரைக் காண்பான்
சேயொழி பரப்பிக் கீழ்பாற்
றினகரன் உதயஞ் செய்தான்.

24. நிருமல மூர்த்தி ஏவ
நிரையபா தலம்பு குத்தி
வருமமிக் குரத்த பேயை
வன்சிறைப் படுத்தி மீண்டு
கருமபூ மியிலே தம்மான்
கழனிழல் கருதி வந்த
தருமசக் கரமே என்னத்
தயங்கினன் தபனன் மாதோ.

25. ஜெகமெலாங் கெடுத்த பேயைச்
சிதைத்தழற் சிறைக்குள் ளாக்கிச்
சகலமு மடிப்ப டுத்த
தன்னொரு குமரே சற்குப்
பகவனும் பரம தாதை
பரிவுடன் தரித்த வெற்றி
மகிமையொண் மௌலி போலுந்
திகழ்ந்தனன் வயங்கு வெய்யோன்.

26. அலகிலா உயிர்கள் எல்லாம்
அரும்பெறன் மகிழ்ச்சி பூத்த
குலவுகோ டாதி யாய
கொழுங்கடி மலர்கள் பூக்க
விலகரு மவித்தை நீங்கி
மெய்யொளி உளந்தி கழ்ந்த(து)
உலகுசூழ் கங்குல் நீங்கி
உதயமும் திகழ்ந்த தெங்கும்.

27. வண்டுணை விரிந்த செந்தா
மரைமுக மலர்ச்சி காட்டித்
தண்டலை தாழ்த்தி வெண்பூத்
தடஞ்சினைக் கரத்தால் நல்கி
எண்டகு புள்ளின் ஆய
இன்னிசை எடுத்துப் போற்றி
மண்டல மடந்தை ஈசன்
மைந்தனை வணக்கஞ் செய்தாள்.

28. மயலுறும் பாவ தோட
மருங்கறக் கெடுத்து மாந்தர்
உயவறு நலங்கொண்(டு) ஐயன்
உயிர்த்தெழ ஓர்த்த நன்மை
வியனிலத் தெங்கும் ஓடிப்
பரந்துடன் விழாக்கொண் டென்ன
துயிலுணர்ந் தெழுந்து ஜீவத்
தொகுதிகள் களித்த மாதோ.

29. கண்ணிய நிசிக்குள் ளாய
கழிபெருந் துயிலை வீசி
எண்ணிலா உயிர்கள் காலை
ஏப்பலோ டெழுந்த காட்சி
மண்ணியல் வினையின் மாய்ந்த
மன்பதை உயிர்த்தெ ழுந்த
புண்ணியர் தமக்குள் ளாகப்
புத்துயிர் அடைந்தாற் போலும்.

30. எந்தவா றடையு நம்மில்
ஈறிலா ஜீவன் என்னுஞ்
சிந்தனை மருளே நம்மான்
புண்ணியம் ஜீவர்க் கெல்லாஞ்

சொந்தமாம் விசுவ சித்தோர்
சுவர்க்கபே ரின்பந் துய்ப்பர்
அந்தரி யாமி யேசு
என்பதை அயரேல் ஐய.

31. வரைவின்றிக் கிருபை யார்க்கும்
பொதுவென வழுத்தி னாலும்
பரமன்முன் குறித்தோன் உள்ளம்
ஒன்றிலே பழுக்கும் பத்தி
தரணிவான் கிரணம் எந்தத்
தலத்தினுந் தங்கு மேனும்
இரவிகாந் தத்தி னன்றோ
இருங்கனல் பிறக்கும் அம்மா.

32. ஒருநான் வழியே பாவம்
உலகத்தை உடற்று நிற்ப
ஒருநர தேவன் ஈட்டும்
புண்ணியம் உலகுக் கந்தப்
பருவரல் துடைத்து நித்ய
பாகநிப் பயனை நல்கல்
திருவருண் மாட்சிக் கேற்ற
திவ்விய முறையென் றோர்தி.

33. நம்பிரான் உயிர்த்தெ ழுந்த
நலம்பெறு முகூர்த்தந் தன்னில்
அம்புவி அதிர அஞ்சிக்
காவலர் அயர்ந்து வீழ
உம்பர்நின் றிழிந்த தேவ
தூதரோர் இருவர் ஒல்லை
இப்பரிற் சேம வைப்பை
எதிர்ந்தனர் பகைவர் எஞ்ச.

34. இருள்புலர் காலை கண்ட
ஏந்திழை மாரோர் மூவர்
தெருளுறீஇ எழுந்தெம் ஐயன்
சேமவைப் பதனை அண்மி
மருளறச் சமாதி வாயில்
திறவுண்ட மரபை நோக்கி
வெருளுறீஇக் கலங்கி நின்றார்
வெய்துளம் திகைத்து மாதோ.

35. ஆயிடை அருகர் நின்றும்
அவிரொளி மின்னின் ஆர்ந்த
தூயுடை பரித்த தேவ
தூதர்ஓர் இருவர் தோன்றி
நீயிரிச் சேம வைப்பின்
நேடுவ தெவன்கொல் ஜீவ
நாயகன் தன்னை முன்ன
நவின்றவா சகத்தை ஓர்மின்.

36. ஈண்டுளார் அல்லர் ஜீவன்
இயைந்தெழுந் தருளி னார்அக்
காண்டகு நம்பி நும்முன்
கலிலெய நாடு சேர்வர்
பூண்டமெய் அன்ப ருக்குப்
புகலும்இப் புதுமை என்னாச்
சேண்டலத் தெழுந்து போனார்
திகழ்ந்தவை தெரியச் செப்பி.

# பன்மணித்திரட்டு

## திருக்குறள்

1. அன்பிலார் எல்லாந் தமக்குரியர்; அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

2. இனிய வுளவாக இன்னாத கூறல்;
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

3. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

4. எல்லார்க்கு நன்றாம் பணிதல்; அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

5. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்றோர்க் கணி. [பாற்

6. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

7. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

8. அழுக்கற் றகன்றாரும் இல்லை; அஃதில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

9. அற்றா ரழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

10. தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

11. இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

12. வேலன்று வென்றி தருவது; மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

13. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

14. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

15. முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

## நாலடியார்

1. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ?
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு.

2. கரவாத திண்அன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால், என்கொலோ?
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு.

3. வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்—ஆங்கே
இனம் தீதெனினும் இயல்புடையார் கேண்மை
மனம்தீதாம் பக்கம் அரிது.

## நீதிநெறி விளக்கம்

1. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

2. உறுதி பயப்பக் கடைபோகா வேனும்
இறுதிவரை காறும் முயல்ப—இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால் அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில.

3. வஞ்சித் தொழுகும் மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி,
அங்கங் குலைவ தறிவு.

## பழமொழி

1. புலம்மிக் கவரைப் புலமை தெரிதல்
புலம்மிக் கவர்க்கே புலனும்—நலம்மிக்க
பூம்புனல் ஊர! பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்.

2. தம்மால் முடிவதனைத் தாமாற்றிச் செய்கல்லார்
பின்னை ஒருவரால் செய்வித்தும்—என்றிருத்தல்
செங்கீர் அருவி மலைநாட! பாய்வவோ
வெங்நீரும் ஆடாதார் தீ.

3. பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர! அதுவன்றோ?
காய்மேல் தவிசிடும் ஆறு.

## நான்மணிக்கடிகை

1. கண்ணிற் சிறந்த உறுப்பில்லை; கொண்டானில்
துன்னிய கேளிர் பிறரில்லை; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல்.

2. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்;
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம்; குற்றம்
தமரல்லார் கைத்துள்ள தாண்.

3. நாற்றம் உரைக்கும் மலருண்மை; கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம்;—தூக்கின்
அகம்போதிந்த தீமை மனமுரைக்கும்; முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில்.

## திரிகடுகம்

1. தன்னை வியந்து தருக்கலுந்; தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்;—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும்; இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

2. வைததனை இன்சொல்லாக் கொள்வானும்; நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்; ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும்; இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டு வாழ்வர்.

3. தன்நச்சிச் சென்றாரை எள்ளா ஒருவனும்;
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்;
என்றும் அழுக்கா றிகந்தானும்; இம்மூவர்
நின்ற புகழுடை யார்.

## ஆசாரக்கோவை

1. உடை, நடை, சொற்சோர்வு, வைதல் இந்நான்கும்
நிலைமைக்கும், கல்விக்கும், ஆண்மைக்கும், தத்தம்
குடிமைக்கும் தக்க செயல்.

2. பழியார்; இழியார்; பலருள் உறங்கார்;
இசையாத நேர்ந்து கரவார்; இசைவின்றி
இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார்; தள்ளியும்
தாங்கருங் கேள்வி யவர்.

3. படிறும், பயனிலவும், பட்டிபுரையும்,
வசையும், புறனும் உரையாரே என்றும்
அசையாத உள்ளத் தவர்.

## வருணனை

### சூரியோதயம்

1. மீனுடை எயிற்றுக் கங்குற் கனகனை
வெகுண்டு, வெய்ய
கானுடைக் கதிர்கள் என்னும் ஆயிரங்
கரங்கள் ஓச்சித்,
தானுடை யுதயம் என்னுந் தமனியத்
தறியி னின்று
மானுட மடங்கல் என்னத் தோன்றினன்,
வயங்கு வெய்யோன்.

2. எண்ணரிய மறையினொடு கின்னரர்கள் இசைபாட,
உலகம் ஏத்த,
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும் கரங்குவிப்ப,
வேலை என்னும்,
மண்ணுமணி முழவதிர, வான் அரங்கில் நடம்புரிவான்,
இரவி என்னும்
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தால் எனவிரிந்த
கதிர்கள் எல்லாம்.

—கம்பர்.

### ஆறு

3. கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக்
கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள்
ஈதென்னத்
தொல்லையில் ஒன்றே யாகித் துறைதொறும்
பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயஞ் சொல்லும் பொருளும்போற்
பரந்த தன்றே.

—கம்பர்.

4. பாயும் மருதம் செழிக்கவே—பண்ணை
தோயும் மருதம் தளிர்க்கவே
பகட்டுக் கமலக் குட்டத்தில்—புனல்
தகட்டுக் கமலை வட்டத்தில்
போயும் எருமை பதறவே—உற
மேயும் எருமை சிதறவே
புழுதிச் சாலை நனைத்துமே—குளிர்
கொளுதிச் சாலை அனைத்துமே
காயும் உரலும் கரும்புந்தான்—அதில்
பாயும் முரலும் சுரும்புந்தான்
சரிய முதலை முடுக்கியும்—வாழைப்
பெரிய முதலை அடுக்கியும்
காயுந் தவள வாரணம்—எதிர்
ஆயுந் தவள வாரணம்
கழனிக் குடிலைத் தொகுத்து—நெய்தல் அம்
துழனிக் குடிலில் புகுந்ததே.

—முக்கூடற்பள்ளு.

## அந்திமாலை

5. மஞ்சார் மலைவா ரணம்ஒத்தது; வானி னோடும்
வெஞ்சா யையுடைக் கதி ரங்கதன் மீது பாயும்
பஞ்சானன மொத்தது; மற்றது பாய வூறுஞ்
செஞ்சோ ரியெனப் பொலிவுற்றது; செக்கர் வானம்.

—கம்பர்.

6. கான்எலாம் மலர்ந்த முல்லை ககனமீ தெழுந்த தென்ன,
வான்எலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த வெள்ளிவெண் கும்பம் [என்னத்
தூநிலா மதியம்வந்து குணதிசைத் தோன்றிற் றம்மா.

—வில்லிபுத்தூரர்.

7. தலையின்மேற் சுமந்த கையள்,
   தழலின்மேல் மிதிக்கின் ருள்போல்
நிலையின்மேல் மிதிக்குந் தாளள்,
   நேசத்தால் நிறைந்த நெஞ்சள்,
கொலையின்மேல் குறித்த வேடன்
   கூர்ங்கணை உயிரைக் கொள்ள
மலையின்மேல் மயில்வீழ்ந் தென்ன
   மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்.

8. கலையினால் திங்கள் என்ன
   வளர்கின்ற காலத்தே உன்
சிலையினால் அரியை வெல்லக்
   காண்பதோர் தவமுஞ் செய்தேன்;
தலையிலா யாக்கை காண
   எத்தவஞ் செய்தேன் அந்தோ!
நிலையிலா வாழ்வை யின்னம்
   நினைவனோ நிலையி லாதேன்.

9. தாளரிச் சதங்கை யார்ப்பத்
   தவழ்கின்ற பருவந் தன்னிற்
கோளரி யிரண்டு பற்றிக்
   கொணர்ந்தனை; கொணர்ந்து கோபம்
மூளுறப் பொருத்தி மாட
   முன்றிலின் முறையி னோடி
மீளரு விளையாட் டின்னங்
   காண்பனோ! விதியி லாதேன்.

10. ஐயனே! அழகனே! என்
   அரும்பெறல் அமிர்தே! ஆழிக்
கையனே மழுவ னேஎன்
   றவர்வலி கடந்த கால

மொய்யனே! முளரி யன்ன
நின்முகங் கண்டி லாதேன்
உய்வனோ? உலக மூன்றுக்
கொருவனே! செருவ லோனே!

11. முக்கணான் முதலி னோரை
உலகொரு மூன்றி னோடும்
புக்கபோர் எல்லாம் வென்று
நின்றவென் புதல்வன் போலாம்
மக்களி லொருவன் கொல்ல
மாழ்பவன்! வான மேரு
உக்கிட அணுவென் றேடி
உதைத்தது போலும் அம்மா!

அறவுரை

12. தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையும் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும், களவும், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையா;
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்.
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென.

—இளங்கோவடிகள்.

# சில குறிப்புரைகள்

## திருவிளையாடற்புராணம்

இதனை இயற்றியவர் பரஞ்சோதிமுனிவர். இவரிதனை இயற்றியகாலம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. சிவ பெருமானது அறுபத்துநாலு திருவிளையாடல்களைப்பற்றியும் இப்புராணத்துள் விரிவாகக்கூறப்படுகிறது.

அடியார்க்கு நல்லாரும், நச்சினார்க்கினியருமாகிய ஈசன் ஒரு ஏழைப்பெண்ணினது முறையீட்டுக்கிரங்கி, "மாமனாக" வந்து வழக்குரைத்து, நீதிசெய்த அருள்விளையாட்டைப் பற்றிக் கூறுவது இப்பகுதி.

## சீறாப்புராணம்

இதனைப்பாடியவர் ஒரு இஸ்லாமியர், உமறுப்புலவர் என்னும் பெயருடையவர், ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவில் வசித்தவர். இவரது முன்னோர் அரேபியாவிலிருந்து வந்து தென்னிந்தியாவில் குடியேறியவர்கள். ஆண்டவன் அருள்பெற்று, திருத்தூதராகிய, முகம்மது நபிநாயகம் அவர்களது திவ்விய சரித்திரத்தை ஆதிமுதல் அந்தம்வரை அழகாக இதில் கூறியிருக்கிறார்.

அருள்வள்ளலாகிய நாயகம் அவர்கள், ஒரு மானுக்காகப் பிணைநின்று, அம்மானையும் மீட்டு, நன்னெறிதப்பியலைந்த வேடனையும் நல்வழிப்படுத்திய சரித்திரம் இப்பகுதியுள் அழகாக வர்ணிக்கப்படுகிறது.

## தேம்பாவணி

இதனை இயற்றியவர் வீரமாமுனிவர். இவரது இயற் பெயர் "பெஸ்கி" என்பது. இவர் ஒரு இத்தாலியர்; 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னாடடைந்து, தமிழ்கற்று, பல தமிழ்க்காவியங்களை இயற்றியிருக்கின்றார். இவர் தமிழுக்குச்செய்த தொண்டுகளும் சீர்திருத்தங்களும் பல.

இந்நூல், யேசுபெருமானின் கைத்தாதையாகிய சூசை யப்பரின் சரிதையை விநயமாகக்கூறுவது. கன்னிமரியம் மாள் கர்ப்பமுற்ற செய்திகேட்டுக் காவலாகிய சூசைமா முனிவருக்கு ஐயந்தோற்றியது. அவ்வையத்தைத் தேவ தூதர் அகற்றிய விபரம் இப்பகுதியில் கூறப்படுகிறது.

## குசேலோபாக்கியானம்

இதனை இயற்றியவர் வல்லூர் தேவராஜ்பிள்ளை என் கிறார்கள் ஒருசிலர். வேறுசிலர், மகாவித்துவான், மீனுக்ஷி சுந்தரம்பிள்ளை என்கின்றனர்.

குசேலர் என்பதற்கு, கிழிந்த ஆடையை உடையவர் என்பது பொருள். இவரது இயற்பெயர் சுதாமா என்பது.

குசேலரும், கண்ணபிரானும், ஓராசிரியரிடம் கல்வி கற்றவர்கள். பின்பு கண்ணபிரான் துவாரகைக்கு மன்ன னுயினர். குசேலர், மணமுடித்து இருபத்தேழுமக்களைப் பெற்று, வறுமையால் வாடினர். அப்போது, தமது மனைவியால் ஏவப்பட்டு, கண்ணபிரானிடம்போய்த் தமது வறுமையை நீக்க முற்படுதலைப்பற்றி இங்கு கூறப்படுகிறது.

## இரக்ஷணிய யாத்திரிகம்

இதனை இயற்றியவர் H. A. கிருஷ்ணபிள்ளை என்பவர். இவர் தென்னிந்தியாவில், திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தவர். இந்துசமயத்திலே பிறந்து, வளர்ந்து, அச்சமயக் கோட்பாடுகளை நன்கு கற்றுத்தேர்ந்தவர், கடவுட்பக்தி நிரம்பியவர்; இவரது பிற்காலசீவியம், இரக்ஷணிய யாத்திரையைநாடி, திவ்விய இரட்சகரின் பாதாரவிந்தங்களைப் பற்றியிருந்ததென்பதற்கு இந்நூலே சாட்சிபகரும்.

இதன் முதற்பதிப்பு 1894இல் வெளியிடப்பெற்றது. இந்நூல் "பரதேசியின் மோக்ஷப்பிரயாணம்" (The Pilgrim's Progress) என்னும் ஆங்கிலநூலைத்தழுவி எழுதப்பட்டதாக ஆசிரியரே கூறுகின்றார். அன்றியும், "கம்பர், திருவள்ளுவநாயனார் முதலிய சில மகாகவிகளின் கருத்தும், பொருளும், சிறுசிறு சொற்றொடர்களும் இந்நூலகத்து அரதநகசிதம்போலப் பதிக்கப்பட்டன" என்றும் ஆசிரியரே, நூல்முகவுரையில் கூறியிருக்கிறார்.

இரட்சகர் பெருமான் மரித்தடக்கப்பட்ட மூன்றாம்நாள், தாம் வாக்குப்பண்ணியபடி உயிர்தெழுதலைப்பற்றி இப்பகுதியில் சொல்லப்படுகிறது.

ளை என்பவர்.
ரவைச் சேர்ந்
அச்சமயக்
டவுட்பக்தி
ணிய யாத்
ந்தங்களைப்
றும்.

பெற்றது.
(The
) எழுதப்
" கம்பர்,
ருத்தும்,
லகத்து
ரியரே,

ம்நாள்,
பகுதி

சாவகச்சேரி

## மகாலக்குமி புத்தகசாலை

இங்கே யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பரீட்சைக்குரிய புத்தகங்களும், மற்றும் கீழ்வகுப்புக்குரிய புத்தகங்களும், பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய சகலபொருட்களும், இலக்கியம், இலக்கணம், காவியம், புராணம், இதிகாசம், நீதிநூல், சோதிடம், வைத்தியம், வேதாந்த சித்தாந்த நூல்களும், கதை, கீர்த்தனை, மாலை அம்மானை, கும்மி, நாவல் முதலிய நூல்களும் தொகையாகவும் சில்லறையாகவும் சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்,

வியாபாரிகளுக்கும், உபாத்தியாயர்களுக்கும்
தொகைக்குத் தக்க கழிவு (கமிஷன்) கொடுக்கப்படும்.

இங்கே பலவித பத்திரிகைகளும் கிடைக்கும்,

பழைய புத்தகங்கள் கட்டிக்கொடுக்கப்படும்.

**சு. செல்லக்குட்டி,**
சாவகச்சேரி